**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீபராபவ வருடம், வைகாசி திங்கள் மாதம் 26 -ம் நாள்,**

**CC. No.181 of 2024**

**(CNR No.TNVP10-0005504-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1 | வழக்கு எண் | : | C.C. No.181/2024 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண். 589/2023,<br>இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1), |
| 3 | எதிரிகள் விவரம் | : | ஞானப்பிரகாசம், வயது 40,<br>த/பெ முத்துலிங்கம்,<br>பள்ள தெரு,<br>கொள்ளார் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 14.11.2023 |
| 5 | முறையீடு | : | 14.11.2023 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 15.11.2023 to 16.11.2023 = 2 day |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 19.10.2024 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 10.03.2025 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 07:59:55 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 27.02.2026 | 27.02.2026 |
| | | | PW-2 | 11.03.2026 | 11.03.2026 |
| | | | PW-3 | 11.03.2026 | 11.03.2026 |
| | | | PW-4 | 11.03.2026 | 11.03.2026 |
| | | | PW-5 | 01.04.2026 | 01.04.2026 |
| | | | PW-6 | 06.04.2026 | 06.04.2026 |
| | | | PW-7 | 17.04.2026 | 17.04.2026 |
| | | | PW-8 | 17.04.2026 | 17.04.2026 |
| | | | PW-9 | 06.05.2026 | 06.05.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி)BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.06.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.06.09 08:00:00 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி இதச பிரிவு 294(b), 323 353, 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றிநிரூபிக்கப்படாததால் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுக்களில் இருந்து எதிரியை விடுதலை செய்து BNS பிரிவு 271(1) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 19.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 04.06.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D. ஏழுமலை, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

### 1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-

இவ்வழக்கின் வாதியானவர் ரோஷணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 14.11.2023 ம் தேதி நிலைய பொறுப்பு அதிகாரியான பாஸ்கர் என்பவரின் செல்போனுக்கு ரோஷணை காவல் நிலைய பாரா

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:07 +0530

காவலர் 1245 தனுஷ் என்பவர் போன் செய்து சாலை கிராமத்தில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்ன தகவலின்பேரில் பாஸ்கர் என்பவர் சாலை கிராமத்திற்கு சென்று விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்த்துவிட்டு காவல் நிலையத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது மதியம் 15.30 மணியளவில் கொள்ளார் கிராமம் பேருந்து நிறுத்தம் அருகில் வந்தபோது எதிரி ஞானப்பிரகாசம் என்பவர் அவரது அண்ணன்களுடன் ரோட்டில் சண்டை போட்டுக்கொண்டிருந்தவரை பாஸ்கரன் என்பவரின் குடும்ப சண்டையை ரோட்டில் போடாதீர்கள் வீட்டிற்கு கலைந்து செல்லுமாறு சொன்னவுடன், எதிரியானவர் பாஸ்கரனை பார்த்து ஓத்தா தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டியும் , எங்க குடும்ப சண்டையை நீ யாருடா வந்து மறிக்கிறது என்று பணி செய்யவிடாமல் தடுத்து பாஸ்கரனின் வலது கன்னத்தில் கையால் அறைந்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி போலீஸ்னா பெரிய பூலா என்று அசிங்கமாக திட்டி உன் குடும்பத்தை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323,353,506(i) ன்படி ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323,353,506(i) - ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:12 +0530

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230- BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் இதச பிரிவுகள் 294(b), 323,353,506(i) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்:**

- ➔ பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அசா.1 சம்பவம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ மற்றொரு கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.5, அ.சா.6 சம்பவம் பற்றி தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவு அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ மருத்துவர் அ.சா.7 காயம்பட்ட அவருக்கு சிகிச்சை அளித்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:17 +0530

➔ காவல் உதவி ஆய்வாளர்கள் அ.சா.8, அ.சா.9 ஆகியோர் வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(பி) - BNSS -ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10) அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் சம்பவ இடம் சாலை கிராமத்திற்கு செல்லும் வழியில் என குறிப்பிடப்பட்டுள்ளது, குறிப்பிட்ட இடம் சொல்லவில்லை. எதிரியின் அண்ணன், பாரா காவலர் தனுசு, விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணன் ஆகியோர் இவ்வழக்கில் சாட்சிகளாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:22 +0530

விசாரிக்கப்படவில்லை. விபத்து பதிவேட்டில் தெரியாத ஒரு நபர் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புகாரில் எதிரியின் பெயர் குறிப்பிட்டுள்ளது. மேற்படி காரணங்களினால் எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;-**

**வழக்கின் சம்பவம் குறித்து அ.சா.1, அ.சா.2, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.** பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு.பாஸ்கரன்** அவரது சாட்சியத்தில் ரோஷணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 14.11.2023 அன்று தலைமை காவலர் தனுசு என்பவர் சாலை கிராமத்தில் விபத்து நடந்திருப்பதாக தகவல் சொன்னதன் அடிப்படையில் அன்றைய தினமே மதியம் 3:30 மணிக்கு சாலை கிராமம் கொள்ளாறு பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது எதிரி மற்றும் அவரது அண்ணன் சாலையில் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அதனை மறித்தபோது எதிரி அ.சா.1-யை வலது கன்னத்தில் அறைந்து மயிறு தேவிடியா பையா என அசிங்கமாக திட்டி உன் குடும்பத்தை ஒழித்து விடுவேன் என மிரட்டியதாகவும், அங்கிருந்து ராஜேந்திரன், ராஜன், எழுமலை ஆகியோர் எதிரியை மறித்ததாகவும், தனக்கு வலது காதில் வலி இருந்ததால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று விட்டு மறுநாள் 15.11.2023 அன்று ரோஷணை காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:27 +0530

13. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 புகாரை 14.11.2023 அன்று எழுதி மறுநாள் 15.11.2023 அன்று கொடுத்ததாகவும், அந்த சமயத்தில் தான் ரோஷணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் ராஜேந்திரன், ராஜன் ஏழுமலை மற்றும் ஒரு நபர் என புகாரில் குறிப்பிட்டுள்ளதாகவும், சம்பவ இடத்தை பேருந்து நிறுத்தத்திற்கு அருகே ரோட்டில் நடந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 அவருக்கு காது வலி சம்பந்தமாக காது மருத்துவரை பார்த்ததாகவும், அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை எனவும், சம்பவ சமயத்தில் சுமார் 20 நபர்கள் இருந்ததாகவும், அந்த சமயத்தில் அ.சா.1 சீருடையில் இருந்ததாகவும், ரெயின் கோட் பேண்ட் அணிந்திருந்ததாகவும், சம்பவ இடத்துக்கு செல்லும்போது பொது நாட் குறிப்பில் எழுதியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

14. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. ராஜேந்திரன்** அவரது சாட்சியத்தில் கடந்த 2023-ம் வருடம் ஒரு நாள் மாலை நேரத்தில் அ.சா.1 ரோந்து பணிக்கு வந்தபோது எதிரி மற்றும் அவரை அண்ணன் கொள்ளாறு பேருந்து நிறுத்தம் அருகே ரோட்டில் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அ.சா.1 அதனை கேட்டபோது அ.சா.1 க்கும், எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அசிங்கமாக பேசியதாகவும், அதன் பிறகு தான் அங்கிருந்து வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.2 சம்பவ சமயத்தில் எதிரி வந்து அசிங்கமாக பேசினாரா என்று தெரியாது எனவும், தான் பேருந்து நிறுத்தம் அருகே

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:32 +0530

நின்றதாகவும், சண்டையை பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

15. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான **அ.சா.5 திரு. விஜயகுமார்** அவரது சாட்சியத்தில் சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக கொள்ளார் பேருந்து நிறுத்தம் அருகே பகல் 2 மணி அளவில் கூட்டமாக இருந்தது எனவும், யார், யாருக்கு சண்டை என தெரியாது எனவும், ஞானபிரகாசத்துக்கும் போலீசாருக்கும் சண்டை என சொன்னதாகவும் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான **அ.சா.6 திரு.ஏழுமலை** அவரது சாட்சியத்தில் எதிரி அவரது சித்தப்பா மகன் எனவும் வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது என குறிப்பிட்டுள்ளார். அ.சா.5, அ.சா.6 ஆகியோர் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர் எனினும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை.

16. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் **அ.சா.7 திருமதி.மோனிஷா** அவரது சாட்சியத்தில் கடந்த 14.11.2023 மாலை 4:30 மணி அளவில் பாஸ்கரன் என்பவரை அவருடன் பணிபுரியும் கண்ணன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், அன்றைய தினம் 4 மணிக்கு கொள்ளாறில் அடையாளம் தெரியாத ஒரு நபர் கையால் தாக்கியதாக கூறியதாகவும், பாஸ்கரனை பரிசோதனை செய்தபோது அவரது வலது கன்னத்தில் கன்றிய காயம் இருந்ததாகவும், அவரை புறநோயாளியாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:38 +0530

சிகிச்சை அளித்ததாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.7 விபத்து பதிவேட்டில் வலது கன்னம் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஒரு நபர் வண்டியில் இருந்து கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், தொடர்ந்து ஒருவர் தூக்கம் இல்லாமல் பணியில் இருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

17. கடந்த 14.11.2023 மதியம் 3.30 மணி அளவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.1 பணி நிமித்தம் காரணமாக கொள்ளாறு கிராமம் பேருந்து நிறுத்தம் அருகே சென்ற போது எதிரி அவரது அண்ணனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும்,அ.சா.1 கலைந்து வீட்டுக்கு செல்லுமாறு சொன்னபோது எதிரி அ.சா.1-யை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி கன்னத்தில் அறைந்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி போலீஸ்னா என்ன பெரிய பூலா உன் குடும்பத்தை கொலை செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டினார் என்பது அரசு தரப்பு வழக்காகும். புகாரில் எதிரி அவரது அண்ணன்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 சம்பவம் பற்றியும் அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சம்பவ சமயத்தில் எதிரிக்கும் அ.சா.1 ற்கும் வாக்குவாதம் நடந்ததாக குறிப்பிட்டுள்ள போதிலும் எதிரி தாக்கியதாக குறிப்பிடவில்லை. அ.சா.2 சம்பவ சமயத்தில் எதிரி அ.சா.1-யை தகாத வார்த்தைகளால் திட்டியதாக முதல் விசாரணையிலும் அது பற்றி

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.09 08:00:43 +0530

தெரியாது என குறுக்கு விசாரணையிலும் முரண்பட சாட்சியமளித்துள்ளார்.

18. மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.5, அ.சா.6 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவத்தன்று அ.சா.1 க்கு வலது கன்னத்தில் கன்றிய காயம் ஏற்பட்டதாக மருத்துவ ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரிலும் குற்ற இறுதி அறிக்கையிலும், எதிரி அவரது அண்ணன்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டு இருந்தபோதிலும் எதிரியின் அண்ணன் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. இது குறித்து புலன் விசாரணை அதிகாரி அ.சா.9 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எனினும் அது குறித்து எவ்வித விளக்கமும் முன்னிடப்படவில்லை. விபத்து பதிவேட்டில் அ.சா.1-யை மருத்துவமனைக்கு அழைத்து வந்த நபர் அவருடன் பணிபுரியும் கண்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கண்ணன் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 பணியில் இருந்தபோது வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக அரசு தரப்பில் வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 சம்பவ சமயத்தில் பணியில் இருந்ததற்கான எவ்வித ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகே குடியிருப்புகள் இருந்ததாக குறிப்பிட்டுள்ள போதிலும் அதில் உள்ள நபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை. சம்பவ நேரத்தில் முழு சீருடையில் இருந்த அ.சா.1 சாலையில் சண்டை போட்டுக் கொண்டிருந்த ஒரு நபர் சண்டையைக் கேட்டபோது

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.09 08:00:50 +0530

போலீசாரை கன்னத்தில் அறைந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.1 பணியில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. சம்பவம் குறித்து அ.சா.1 சாட்சியத்தை சான்றுருத்தம் செய்யும் வகையில் கண்ணுற்ற சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய தவறிவிட்டது என நீதிமன்றம் கருதுகிறது.

19. **புகார் அளித்தது பற்றி நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.** நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 கடந்த 14.11.2023 அன்று சம்பவம் நடைபெற்ற அன்றைய தினமே புகார் எழுதப்பட்டு மறுநாள் 15.11.2023 அன்று புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

20. காவல் உதவி ஆய்வாளர் **அ.சா.8 திரு. ராஜேந்திரன்** அவரது சாட்சியத்தில் கடந்த 14.11.2023 இரவு 9.30 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று நிறைய குற்ற எண்.589/2023 சட்டப்பிரிவுகள் 2949(b), 323, 353, 506(1) - ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளார். புகார் 14.11.2023 தேதியிடப்பட்டு அன்றைய தினமே வழக்கு பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது/ புகார் கொடுத்த தேதி குறித்து அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட சாட்சியம் அளித்துள்ளார்.

21. **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்து காவல் உதவி**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:00:58 +0530

**<u>ஆய்வாளர் அ.சா.9 மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் சாட்சிமளித்துள்ளனர்.</u>** காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 அவரது சாட்சியத்தில் 15.11.2023 காலை 9 மணி அளவில் சம்பவ இடத்துக்கு சென்று சாட்சிகள் ராமதாஸ், ராஜன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். பார்வை மகசர் சாட்சியான **அ.சா.3 திரு. ராமதாஸ்** அவரது சாட்சியத்தில் கடந்த 2023-ம் வருடம் ஒரு நாள் காலை 10 மணி அளவில் எதிரியும், அவரது அண்ணனும் அடித்துக்கொண்டபோது போலீசார் வந்து கேட்டு பிரச்சனையானதாகவும் அது சம்பந்தமாக வரைபடம் போட்டு தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் தன்னுடையது எனவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.3 தன்னிடம் தனியாக வாக்குமூலம் வாங்கவில்லை எனவும், படம் வரைந்து கொண்டிருக்கும்போது தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் எனவும், அதில் உள்ள விவரம் தெரியாது எனவும், எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

22. மற்றொரு பார்வை மகசர் சாட்சியான **அ.சா.4 திரு. ராஜன்** அவரது சாட்சியத்தில் சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக மாலை 5:45 மணியளவில் கொள்ளார் மெயின் ரோட்டில் இருக்கும் பிள்ளையார் கோயில் அருகே இருந்தபோது போலீசார் சண்டை சம்பந்தமாக விசாரித்து படம் வரைந்து தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது எனவும்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:01:04 +0530

குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.4 தான் 2 கையொப்பம் செய்ததாகவும், காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாகவும், தன் முன்பாக வரைபடம் வரையவில்லை எனவும், ஏற்கனவே வரைந்த வரைபடத்தில் கையொப்பம் வாங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற கேள்வியின் போது அ.சா.4 கொள்ளாறில் வரைபடத்தில் கையொப்பம் செய்ததாகவும், காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை எங்கு செய்தேன் என நினைவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சாட்சியங்களில் இருந்து பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 கையொப்பம் செய்த இடத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.4 தன் முன்பாக வரைபடம் வரையவில்லை என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

23. **<u>வழக்கின் புலன் விசாரணை பற்றி அ.சா.8, அ.சா.9 காவல் உதவி ஆய்வாளர்கள் சாட்சியம் அளித்துள்ளனர்</u>. அ.சா.8 திரு. ராஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 14.11.2023 இரவு 9.30 மணி அளவில் அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து மறுநாள் காலை 9 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் அதன் வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 15.11.2023 காலை 11:30 மணிக்கு கொள்ளாறு கிராமத்தில் ஐசிஐசிஐ வங்கி அருகே இருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பணி மாறுதல்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:01:09 +0530

காரணமாக வழக்கு கோப்பினை சசிகுமார் அவர்களிடம் ஒப்படைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

24. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.8 இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 தன்னுடன் பணிபுரியும் சிறப்பு உதவி ஆய்வாளர் எனவும், சம்பவத்தன்று அ.சா.1 பணியிலிருந்து அதற்கான பணி பதிவேடு கொடுக்கவில்லை எனவும், பணி குறித்து பொது நாட் குறிப்பு பராமரிப்பும் எனவும், அன்றைய தினம் அ.சா.1 தனியாக சென்றதாகவும் அவருடன் யாரும் செல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

25. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.9 திரு. சசிகுமார் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 2024-ம் வருடம் இவ்வழக்கினை தனது மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து காயச்சான்று பெற்றதாகவும், வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.9 சம்பவத்தன்று அ.சா.1 பணியில் இருந்ததற்கான பதிவேடு கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவும், எதிரியின் பெயரை எப்படி தெரிந்து கொண்டார் என புகாரில் சொல்லவில்லை எனவும், எதிரியின் அண்ணனை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

26. பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் புகார்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:01:15 +0530

அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.5, அ.சா.6 ஆகியோர் அ.சா.1 சாட்சியத்திற்கு ஆதரவு அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3, அ.சா.4 ஆகியோர் வரைபடம் வரைந்தது குறித்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். மருத்துவர் அ.சா.7 காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர்கள் அ.சா.8, அ.சா.9 ஆகியோர் இவ்வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்னர். பணி நிமித்தமாக சீருடையில் சென்ற காவல் உதவி ஆய்வாளரை சாலையில் ஒரு நபர் தாக்கியதாக வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 பணியிலிருந்ததற்கான ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. புகாரில் எதிரியும், அவரது அண்ணன்களும் சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது அ.சா.1 அதனை கேட்டபோது வழக்கில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில், எதிரியின் அண்ணன் குறித்து எவ்வித விவரமும் முன்னிடப்படவில்லை. எதிரியின் அண்ணனை வழக்கின் சாட்சியாக விசாரிக்கவில்லை. விபத்து பதிவேட்டில் அ.சா.1-யை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக உள்ள கண்ணன் என்பவர் இவ்வழக்கின் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. புகார் கொடுத்த தேதி குறித்து அ.சா.1 முதல் தகவல் அறிக்கைக்கு முரண்பட சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி காரணங்களினால் காவல் சீருடையில் பணியில் இருந்த அ.சா.1.யை எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி, கன்னத்தில் அறைந்து, கொலை மிரட்டல் விடுத்ததான

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.09 08:01:20 +0530

குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. **இறுதியாக, எதிரி இதச பிரிவு 294(b), 323 353, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படதாததால் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுக்களில் இருந்து எதிரியை விடுதலை செய்து BNS பிரிவு 271(1) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.**

28. வழக்கு சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜ ுன் திங்கள் 09-ம் தேதி, வெவ்வாய்க்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:01:26 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.பாஸ்கரன் | காயம்பட்ட நபர் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | திரு.ராஜேந்திரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.முனுசாமி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | திரு. ராஜன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு. விஜயகுமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | திரு. ஏழுமலை | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.7 | திருமதி.மோனிஷா | மருத்துவர் |
| அ.சா.8 | திரு.ராஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.9 | திரு.சசிக்குமார் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.11.2023 | புகார் மனு | அ.சா. 1 |
| அ.சா.ஆ.2 | ----- | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் | அ.சா. 3 |
| அ.சா.ஆ.3 | ----- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.4 | 14.11.2023 | அ.சா.1 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா. 7 |
| அ.சா.ஆ.5 | 14.11.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| அ.சா.ஆ.6 | 15.11.2023 | பார்வை மகசர் | அ.சா.8 |

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.09 08:01:41 +0530

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.7 | 15.11.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.09 08:01:46 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.